3. கவன ஈர்ப்பு

கிருட்டிணகிரி அணை கிராமிய சிறுபட்டு நூற்பாலை கதவடைப்பு குறித்தும், தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டியது குறித்தும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 55-ன் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன், இருக்கையில் இல்லை. இருப்பினும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர். தகவலுக்காக தனது அறிக்கையை அவையில் வைக்கலாம்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை

தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி அணையிலுள்ள டான்சில்க் பட்டு நூற்பாலையில் பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள டான்சில்க் நிறுவனத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு அதன் கட்டுப்பாட்டில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

2) இத்தொழிற்சாலையில் மொத்தம் 85 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள்:-

(1) பட்டுத் தொழிலாளர் சங்கம் (ஏஐடியுசி)

(2) தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (எல்பிஎப்)

(3) தேசீய பட்டு தொழிலாளர் சங்கம்

3) இந்நிறுவனத்தின் கொதிகலன் மற்றும் நீர் அளவு காட்டும் கருவி (வாட்டர் லெவல் இண்டிகேட்டர்) நீராவி அளவு காட்டும் கருவி (ஸ்டீம் சேப்டி வால்வுகள்) ஆகியவை பழுதடைந்துள்ளதால் அவற்றை சீர்செய்யும் பொருட்டு அதில் பணிபுரிந்த 85 தொழிலாளர்களில் 78 தொழிலாளர் களுக்கு 3.4.96-ந் தேதி முதல் லே-ஆப் வழங்கப்பட்டு, அதற்குரிய நஷ்டஈடும் வழங்க உள்ளதாக டான்சில்க் பட்டு நூற்பாலை உதவி இயக்குநர் தெரிவித்திருந்தார்.

1996 ஆகஸ்ட் 22] [திரு. அ. இரகுமான்கான்]

இந்த லே-ஆப் காலத்தை ஆட்சேபித்து மேலே கூறப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள் கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் முன் கடிதங்களை தாக்கல் செய்திருந்தன. 10.4.96 முதல் 10.6.96 வரை பல தேதிகளில் கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் பேச்சு வார்த்தை மேற்கொண்டார். நிர்வாகத் தரப்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பேச்சுவார்த்தையில் தொழிற்சங்கங்கள், பயிற்சி அற்ற தொழிலாளர்கள், கொதிகலன் இயக்கத்தில் பயன்படுத்தப்பட்டதால் சேதம் ஏற்பட்டதென்றும், ஆகவே லே-ஆப் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கில் திட்டமிட்டு நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும், இந்த லே-ஆப்-ஐ ரத்து செய்து உடனடியாக அனைத்து தொழிலாளர்களுக்கும் வேலை வழங்க வேண்டும் என்றும் கோரின. இந்நிலையில் நிர்வாகம் தங்களது 11-6-96ந் தேதிய கடிதத்தில், தொழிற் சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் ஆலை வாயிலின்முன் கூடி கண்ணாடிகளை உடைத்தும், அலுவலகப் பணியாளர் களை கட்டாயப்படுத்தி உதவி இயக்குநரின் அறைக்குள் வைத்துப் பூட்டி சிறைப்படுத்தியதாகவும், பின்னர் காவல் துறையின் உதவியின் பேரில் அவர்களை விடுவித்ததாகவும், எனவே உடைமைகளுக்குப் பாதுகாப்பற்ற நிலையில் நிர்வாகத்தை சுமுக நிலையில் இயக்க போதிய வாய்ப்புகள் இல்லாததால், 15-6-96-ந் தேதி முதல் கதவடைப்பு செய்து உள்ளதாகவும் தகவல் அளித்தனர்.

(4) அதன் பின்னர் மீண்டும் இருதரப்பினரையும் அழைத்து பல தேதிகளில் கிருஷ்ணகிரி, தொழிலாளர் அலுவலரால் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டது. 2.7.'96ம் தேதிய பேச்சு வார்த்தையில் மட்டும் நிர்வாகத்தின் உதவி இயக்குநர் கலந்து கொண்டார். ஆலையின் நிலையில் முன்னேற்றம் ஏற்படாததால் கதவடைப்பு தொடர்கிறது என்றும், நிலைமை சீரடைந்தால் காஞ்சிபுரத்திலுள்ள தங்களது தலைமை அலுவலகத்தின் உதவியுடன் கலந்தாலோசித்து கதவடைப்பு நீக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்தார். இதனையடுத்து, செங்கை அண்ணா மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு பட்டு நூற்பு இணையத்தின் தனி அலுவலருக்கு, நிர்வாகத்தின் பொறுப்புள்ள அலுவலர் ஒருவரை கிருஷ்ணகிரி, தொழிலாளர் அலுவலர் முன்பு நடைபெறும் பேச்சுவார்த்தை களில் தவறாது கலந்து கொள்ளத் தக்க அறிவுரை வழங்குமாறு தொழிலாளர் ஆணையரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(5) மேற்படி தொழிற் தாவா, தற்போது சேலம், தொழிலாளர் துணை ஆணையரால் 25-7-1996 அன்று பேச்சு வார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இப்பிரச்சினை குறித்து தொழிலாளர் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.